International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 01 Issue: 01 July to September 2019 www.irjtsjournal.org

# காரைக்காலம்மையாரின் பக்திநெறி

வே.ஜெயராணி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
சசூரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
விஜயமங்கலம்.

காரைக்காலம்மையார் பன்னிரு திருமுறையை வகுத்த சைவ நாயன்மார்களில் ஒருவர். இவன் சிவனடியாரை பேணுவதில் சிறந்தவர். இவர் பாடிய பக்திபனுவல் பதினொராம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது. இவரது பக்தி திறத்தால் இறைவனால் ‘அம்மையே’ என்று அழைக்கும் வாய்ப்பை பெற்றவர் ஆவார்.

**காரைக்காலம்மையாரின் சிறுவயது இறைபக்தி**

சோழநாட்டில் கடற்றுரைப் பட்டினமாய் திகழும் காரைக்கால் என்னும் வளப்பதியிலே வணிககுலர் தலைவனாக தனதத்தன் என்னும் வணிகன் வாழ்ந்திருந்தான். பெருஞ்செல்வமுடைய அவ்வணிகனுக்குத் திருமகளையொத்த பேரழகுடைய பெண்மகவொன்று பிறந்தது. தவப்பயனாகத் தோன்றிய அக்குழந்தைக்குப் புனிதவதி எனப் பெயரிட்டனர். அவரது தாயார் பெயர் தர்மவதி. **“புனிதவதியார் மணலால் சிறுவீடு கட்டி விளையாடும் பிள்ளைப் பருவத்திலேயே சிவபெருமானின் திருவடிகளை வணங்கி அவரது திருவார்த்தைகளைப் பயின்றார்”.**

புனிதவதியார் வணிககுல தலைவனான பரமதத்தனுக்கு இலட்சுமி தேவியே புத்திரியாக வந்து அவதரித்தார் என்று சொல்லும்படி ஒப்பற்ற பேரழகு உடையவராக அவதரித்தார்.

> **“வாங்கலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணி**
> **தங்கள்குலத் தலைவனார் தனதத்தனார் தவத்தால்**
> **அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து**
> **பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்”**

என்ற பாடல் மூலம் புனிதவதியார் அழகு விளக்கப்பட்டுள்ளது.

புனிதவதியார் இளமைப்பருவம் முதலாக இறையுணர்வு உள்ளவராக காணப்பட்டார். மொழி பேசத் தொடங்கிய மழலைப் பருவத்திலேயே சிவபெருமான் திருவடிகட்கு ஆட்பட்டும், எல்லையற்ற பேரன்பு ததும்பும் சொற்களைப்பேசத் தொடங்கினார். இதனை,

> **“வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்**
> **அணிகிளர்மெல் அடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே**
> **பணி அணிவார் கழற்கடிமை பழகிவரும்பாங்கு பெறத்**
> **தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரும் மொழியின்றார்”**

என்ற பாடல் வணிககுலச் சிறப்பையும், புனிதவதியாரின் இளமைப் பருவத்தையும் விளக்குவதாக உரைக்கின்றார் சேக்கிழார். குழவிப் பருவத்திலேயே அவர் சிவபக்தியுடன் விளங்கியமையையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

**அடியார்க்குப் பணி செய்தல்**

புனிதவதியார் வளர்ந்து தன் இளமைப்பருவத்தில் சிவநேயம் மிகுந்தவராக காணப்பட்டார். தூங்கும் போதுகூட சிவநாமத்தையே சொல்லிக் கொண்டிருப்பார். இவ்வாறு வளர்ந்து மணப் பருவத்தை எய்தினார். இவர் மணப்பருவத்தை எய்தியபோது பெற்றோர் திருமணம் செய்து வைக்க எண்ணினார்கள்.

நாகப்பட்டினத்தில் வாழும் நிதிபதியென்ற வணிகன் தன் மகன் பரமதத்தனுக்கு புனிதவதியாரை மணஞ் செய்விக்க எண்ணி முதியோர் சிலரைத் தனதத்தன் வீட்டிற்கு அனுப்பினான். வந்த மூதறிவோரை வரவேற்று உபசரித்து தனதத்தன் தன் மகளை பரமதத்தனுக்கு திருமணஞ் செய்து தருவதாக இசைந்தான். இருவீட்டின் இசைவுடன் காரைக்காலில் சிறப்பாக திருமணம் நடந்தது.

இறைவன் அடியார்களுக்கு பணிவிடை செய்தலை மனையறமாகக் கொண்டு வாழ்ந்தார். தன் கணவனாகிய பரமதத்தன் அரனையும் அரன் அடியார்களையும் போற்றும் குணநலம் பெறாதவன். ஆதலால் அவன் சென்று அடியார்களைத் தேடிக்கொண்டு வரும் நியதி அற்றவன். அம்மையார் போய் அடியார்களை நாடி அழைத்துவரவும் வாய்ப்பில்லை. ஆதலால் அடியார்கள் தம் இல்லத்திற்கு வந்தால் அவர்களுக்கு சிறப்புமிக்க திருவமுது அளித்தும், உயர்ந்த பொன்னும், நவரத்தின மணிகளும், உயர்ந்த ஆடைகள் முதலான பொருட்களையும் அன்புப் பெருக்கத்தால் அவரவர்களுக்கு தேவையானவற்றைத் தகுதியறிந்து கொடுத்து வந்தார் புனிதவதியார்,

> **“நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும்**
> **செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலும் முதலான**
> **தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவகொடுத்தும்**
> **உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகும்நாள்”**

இப்பாடல் அம்மையார் இல்லற வாழ்விலும் இறைவன் திருவடிக்கீழ் சிவநெறிக்காத்தலில் போற்றிச் சிறந்தார் என்பதை விளக்குகிறது.

**சிவனடியார் வருகை**

காரைக்காலம்மையார் இனிதே இல்லறம் நடத்தி நற்செயல்களும், நற்குணங்களும் நிறைந்து வாழ்ந்து வந்தார். பரமதத்தனும் வணிகத்தில் சிறந்து விளங்கினான். பரமதத்தனை இந்நாட்களில் காணவந்தவர்களில் ஒருவர் இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தார். அக்கனிகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் வேண்டிய காரியத்தை முடித்தனுப்பிய பரமதத்தன் மாங்கனிகள் இரண்டையும் தன் வீட்டில் கொடுக்குமாறு கொடுத்து அனுப்பினான். அப்பழங்களை அம்மையார் வாங்கி வைத்தார்.

அம்மையாரின் கணவன் மாங்கனி கொடுத்தனுப்பிய போது சிவனடியார் ஒருவர் பசியால் வருந்தி களைப்புற்றவராக அவர் வீட்டிற்கு வந்தார். அவருடைய தளர்வை கண்ட அம்மையார் உணவளிக்க எண்ணினார். அப்போது திருவமுது மட்டும் சமைக்கப்பட்டிருந்தமையால் திருவமுதோடு கணவன் கொடுத்த மாங்கனியையும் கொண்டு படைத்து அடியவரை உண்ணச் செய்தார். பசிதீர்ந்த அடியவர் இவரது விருந்தால் உளமகிழ்ந்து சென்றார்.

**துறவு வாழ்வும் பக்தி திறனும்**

பரமதத்தன் அம்மையாரை தெய்வமாக கருதி வணங்கியாமை அவரது வாழ்வில் இறைவனுக்காக வாழும் வாழ்க்கையை மேற்கொள்ள செய்தது.

> **“ஈங்குகிவன் குறித்த கொள்கை இது: இனி இவனுக்காகத்**

**தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி கழித்திங்குன்பால்**
**ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்**
**பாங்குற வேண்டும் என்று பரமர்தாள் பரவி நின்றார்''**

புனிதவதி கணவன் சொன்ன வார்த்தையைக் கேட்டு சிவபெருமானின் திருவடியை துதித்து இறைவா! இனி இவன் பொருட்டு இதுவரை தாங்கிய அழகிய தசை நீக்கி, உம்மிடம் உள்ள பூதகணங்கள் போற்றும் பேய்வடிவை அடியேனுக்கு தந்தருள வேண்டும் என வேண்டியதை இப்பாடல் வழி விளக்கப்படுகின்றது.

அம்மையார் வேண்டியது போன்றே விண்ணுலகமும், மண்ணுலகமும், போற்றத்தக்க பேய்வடிவத்தைப் பெற்றார். இவர் பேய்வடிவம் பெற்றபோது வானத்திலிருந்து தேவர்கள் பூமழை பொழிந்தனர். வானுலகில் துந்துபி என்னும் இசைக்கருவி ஒலித்தது. இப்பேய் வடிவத்தைக் கண்டு சுற்றத்தார் அஞ்சி அவரை வணங்கி அகன்று போனார்கள்.

### துறவு வாழ்வும் பக்தி திறனும்

அம்மையார் துறவு வாழ்வை மேற்கொண்டு சிவனையே நினைத்து வாழ்ந்தார். சிவபெருமானின் அருளால் சிவஞானத்தாலும் அற்புதத் திருவந்தாதி என்ற பாடலை எழுதினார். 'இறைவனுடைய அழகு நிரம்பிய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைப் போற்றிப்பரவும் நல்ல சிவகணங்களுள் நானும் ஒன்றானேன்' என்பதற்கேற்ற,

**''பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீது**
**உறினும் உறாதொழிமேனும்-சிறிதுணர்த்தி**
**மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய**
**நற்கணத்தில் ஒன்றாய நாம்''**

இப்பாடலை பாடியுள்ளார். பின்பு திருவிரட்டை மணிமாலை என்னும் பிரபந்தத்தைப் பாடிப் போற்றிச் சிவபெருமான் வீற்றிருந்து அருள் புரியும் திருக்கயிலையை அடைவதற்கு இறைவனது திருவருள் துணை நின்றாமையால் அத்திருமலையை வழிபடுவதற்கு வடக்கு நோக்கிப் புறப்பட்டார். இவரது பேய்வடிவத்தைக் கண்டு மக்கள் அஞ்சினர். இதைக்கண்டு அம்மையார் சிவபெருமான் என்னைக் கண்டு அருள்புரிவாராயின் உண்மையை உணராத உலகத்தவர் கண்முன் நான் எவ்வாறு தோன்றினால் என்ன என்று கூறி கயிலையை நோக்கிச் சென்றார்.

### கயிலையில் அம்மையாரின் பக்திதிறனும் சிவபெருமானை வேண்டலும்

இறைவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய திருகயிலைக்கு சென்ற அம்மையார் தூய்மையுடைய அம்மலையை தம்காலால் மிதித்து ஏறக்கூடாது என்று தம் தலையினால் நடந்தார். இச்செயல் அவரது பக்திதிறனை காட்டுகிறது. இவ்வாறு தலையால் நடந்து சென்றபோது உமையம்மை இவரது பக்திதிறனையும், அன்பையும் கண்டு வியந்து இறைவனை நோக்கி 'எம்பெருமானே தலையால் நடந்து இம்மலைமேல் ஏறிவரும் இவருடைய அன்புதிறன் என்னே' என வினவினார். இதைக் கேட்ட சிவபெருமான்,

**''வருமிவள் நம்மை பேணும் அம்மைகாண் உமையே மற்றிப்**
**பெருமசேர் வடிவும் வேண்டிப் பெற்றவள் என்று பின்றை**
**அருகுவந்து அணைய நோக்கி அம்மையே என்னும் செம்மை**
**ஒருமொழி யுலகமெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்''**

'அம்மையே' என அழைத்தது இப்பாடல் வழி உணரமுடிகிறது.

சிவபெருமான் அம்மையே என அழைக்கக் கேட்ட புனிதவதியார் 'அருள் செய்அப்பா' என்று சொல்லிக் கோண்டே அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

**முடிவுரை**

காரைக்காலம்மையார் பிறப்பால் வணிககுலம் சிறப்புற்று விளங்கியது. சிறுவயது முதற்கொண்டே சிவபக்தியில் நிலைத்தவராக இருந்தார். வளர்ந்து மணப்பருவம் எய்தி மணம் முடிந்த பிறகும் பக்தியில் தலைத்தோங்கி நின்றார் என்பது இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**துணைநூற் பட்டியல்**

1. **காரைக்கால் அம்மையார் புராணம்**

2. **தேவாரம்**